1970 செப்டம்பர் 7]

கால்நடை வளர்ச்சித்துறை சீரமைப்பு

*270 வினா—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை இலாகாவில் புனர் அமைப்புத் திட்டத்தின் கீழ், மேற்படி இலாகாவில் புதிய பதவிகள் உண்டாக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அவை யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) பதினன்கு தட்டச்சர் பதவிகளும் ஒரு சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவியும் புதிதாக உண்டாக்கப்பட்டன. ஏற்கெனவே இருந்த கண்காணிப்பாளர் என்ற ஐந்து பதவிகள் மேலாளர்கள் என்ற பதவிகளாக உயர்த்தப்பட்டன.

கைத்தறி துணி ஏற்றுமதி

*271 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968, 1969, 1970-ம் ஆண்டுகளில் தமிழ்நாட்டிலிருந்து கைத்தறி துணி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பு என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) 1968—ரூ. 2.59 கோடி

1969—ரூ. 3.46 கோடி.

1970—ரூ. 48.55 இலட்சம்.

(மே முடிய)

*272 வினா—திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

பாதிக்கப்பட்டுள்ள கைத்தறி துணி ஏற்றுமதியை மீண்டும் துவக்குவதற்கும் புதிய மார்க்கெட்டுகளைப் பிடிப்பதற்கும் சிங்கப்பூர், பர்மா, மலேசியா, இந்தோனேஷியா போன்ற நாடுகளோடு அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: முந்தைய ஆண்டுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது. 1969-ஆம் ஆண்டில் சிங்கப்பூர், மலேசியா, ஹாங்காங் ஆகிய நாடுகளுக்குக் கைத்தறித் துணி ஏற்றுமதி உண்மையிலேயே அதிகரித்துள்ளது. கைத்தறித் துணிகள் ஏற்றுமதி வளர்ச்சிக் குழு, கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியைப் பெருக்குவதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

திரு. சு. துரைசாமி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இந்த ஆண்டில் ரூ. 48 லட்சம் என்கிற அளவில் சொன்னார்கள். ஆகவே இதை அதிகரிக்கக் கூடிய முறையில் ஏதாவது திட்டங்கள் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.